சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 29.01.2026

பி.வா.சா.1 – முகமது அப்துல் காதர் S/o ஷேக் மைதீன்

O.S. No.163/2022

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

நானும், வாதி முகமது இஸ்மாயிலும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முகமது அஸ்ரப் அலி என் உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். என் அப்பா ஷேக் மைதீன் செருப்புக்கடை படா சூ மார்ட் என்ற பெயரில் கடை நடத்தி வந்தார். என் அப்பா சொத்து வாங்கும் போது நான் பணம் எதுவும் அவருக்கு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா அவருடைய சுயசம்பாத்தியத்தில் சொத்து வாங்கினார். என் அப்பாவிற்கு பூர்விக பாத்தியப்பட்ட மேலூரில் உள்ள வீட்டை விற்று அந்த சொத்தில் வந்த வருமானத்தை வைத்து தான் வழகவு சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பூர்விக வீட்டை விற்று அதில் கொண்ட வருமானத்தை கொண்டு சொத்து வாங்கப்படவில்லை. அது அவருடைய சுயசம்பாத்திய சொத்து ஆகும். முகமது இஸ்மாயில் என் உடன்பிறந்த தம்பி. அவர் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருக்கும் சொத்தில் பங்கு இருக்கிறது என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து என் பெயரில் உள்ளது, என் அப்பா கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். வாதிக்கு திருமணமாகி குழந்தைகள் நீண்டகாலமாக இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. அவர்கள் திருமணமானவுடனேயே வீட்டில் இருந்து வெளியேறிவிட்டார்கள். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் வாதி,

மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோருடன் வழக்கு சொத்தை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுவதாக 3 பேரிடமும் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. அவர் என் மீது கொண்ட பாசத்தினாலும், எனக்கும், என் மகள்களுக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார். நான் தவறாக சொல்கிறேன் என்றும் என் தகப்பனார் வாதியான என் தம்பி 1ம் பிரதிவாதியான என் அண்ணன் ஆகியோரையும் என்னையும் கலந்து கொண்டு தான் என் பெயரிலும் என் மகள்கள் பெயரிலும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு என் மகள்கள் உரிய வயதை அடைந்த பிறகு என் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். மேற்படி தானமாக எங்களுக்கு எழுதி கொடுத்த சொத்தை நானும், எனது பிள்ளைகளும் சாலம்மாள் என்ற நபருக்கு விற்பனை செய்துவிட்டீர்களா என்றால் ஆமாம். கடந்த 23.09.2002 அன்று எழுதி கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட பத்திரம் என்றால் சரியல்ல. அது பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் என்பதால் தான் அதை மீண்டும் சாலம்மாளுக்கே என் தந்தை ஷேக் மைதீன் மீண்டும் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சாலம்மாளுக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தை பதிந்து கொடுக்கும்போதே வாதிக்கும் பணம் கொடுப்பதாக ஒப்புகொண்டு தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றும், அதை அனுசரித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது அ.வ.எண்.94/2022 வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அது பொய்யானது. மேற்படி வழக்கு இதே நீதிமன்றத்தில் தீர்ப்பாகி தற்போது வரை தீர்ப்பு தொகையை நான் வாதியிடம் செலுத்தவில்லை என்றால் இல்லை. மேல்முறையீடு செய்துள்ளோம். திருமணமாகி 8 ஆண்டுகள் கழித்து வாதிக்கு 2 குழந்தைகள் பிறந்தன என்றால் எனக்கு தெரியாது. குழந்தை பிறந்த பிறகு வாதி என தந்தையான

ஷேக் மைதீனிடம் எனது பாகத்தை பிரித்நது கொடுக்கும்படி கேட்டார் என்றும், அவர் விற்ற சொத்து தொகை என்னிடம் உள்ளது என்றும் அவரிடம் சென்று பாகம் பிரித்து கேள் என்று கூறிவிட்டார் என்றால் சரியல்ல. 21.06.2020 தேதியில் வாதியும் அவரது குடும்பத்தாரும் கல்யாண நிகழ்ச்சிக்கும் செல்லும் போது, வாதியை அவருடைய குடும்பத்தாரையும் நானும் என்னுடைய ஆட்களும் அடித்து குற்ற வழக்கு பதிவானது என்றால் சரியல்ல. எங்களை தான் அவர்கள் தரப்பில் இருந்து தாக்கினார்கள். அதை தொடர்ந்து என் மீது முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.1149/2020 மேலூர் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 25.08.2020 அன்று என் தந்தை ஷேக் மைதீன் எனது வீட்டில் காலமாகிவிட்டார். என் தந்தை இறந்த விபரத்தை வாதியாகிய என் தம்பியிடம் சொன்னோமா என்றால் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் சொல்லவில்லை. வாதியிடம் பேச்சுவார்த்தை இல்லை என்றாலும் வேறு நபர்களிடம் சொல்லிவிட்டிருக்கலாம் என்றால் நாங்கள் விருப்பப்படவில்லை. என்னுடைய தந்தையின் உடலை மேலூர் பெரிய பள்ளிவாசலுக்கு கொண்டு சென்றோமா என்றால் ஆமாம். அந்த விபரம் தெரிந்த பிறகு தான் மேலூர் பெரிய பள்ளிவாசலுக்கு வாதி வந்தார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே எங்கள் வீட்டில் வந்து அவரும் அவரது மனைவியும் சண்டையிட்டார்கள். மேலூர் பெரிய பள்ளிவாசலில் வைத்து, ஜமாத்தார் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா என்றால் பேச்சுவார்த்தை என்ற பெயரில் மிரட்டினார்கள். 25.08.2020 அன்று ஜமாத்தார் முன்னிலையில் நானும், எனது அண்ணனான 1ம் பிரதிவாதியும் வாதிக்கு 10 லட்சம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புகொண்டு எழுதி கொடுத்துள்ளோம் என்றால் அது மிரட்டி வாங்கப்பட்டது. என் தந்தையை அடக்கம் செய்யவிடாமல் தடுத்ததால் கையெழுத்து போட்டு கொடுத்தோம். அவ்வாறு மிரட்டி எழுதி வாங்கப்பட்டதாக இருப்பதால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா

என்றால் ஜமாத்தில் வைத்து எழுதி வாங்கப்பட்டது என்பதால் புகார் கொடுக்கவில்லை. என் அப்பாவை அடக்கம் செய்வது தான் எனக்கு அப்போது முக்கியமாக தெரிந்தது அதனால் புகார் கொடுக்கவில்லை. என் தந்தையை அடக்கம் செய்ததற்கு பின்னால் புகார் கொடுத்திருக்கலாம் என்றால் எனக்கு சரியாக அப்போது விபரம் தெரியவில்லை. சர்வே எண்.276/1B, தும்பைபட்டி கிராம சொத்தை கணேஷ் பிரகாஷ் இந்த வழக்கின் 5ம் பிரதிவாதிக்கு 21.01.2022 அன்று கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் என் பெயரில் உள்ள சொத்தை நான் கிரையம் கொடுத்துள்ளேன். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் இருந்தே வாதி சொத்தில் பங்கு வேண்டும் என்று கேட்டு கொண்டு தானே இருந்தார் என்றால் என்னுடைய சொத்தை தான் நான் விற்பனை செய்தேன். வாதி சொத்து கேட்டு பிரச்சினை செய்ததால் மட்டுமே என் தந்தை இறந்த விபரத்தை கூட அவரிடம் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே என்குடும்பத்தில் பேசி முடித்தபடி, என் தந்தையான ஷேக் மைதீன், என் மகள்களுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை மீண்டும் நானும் என் மகள்களும் சேர்ந்து ஷேக் மைதீனுடன் 3ம் நபரான சாலம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என் அப்பா தானமாக கொடுத்த சொத்தை பொறுத்து மீண்டும் அவர் ஏன் விற்பனை பத்திரத்தில் கையெழுத்து செய்தார் என்றால் சாலம்மாள் கேட்டுகொண்டதன் பேரில் என் அப்பாவும் கையெழுத்து செய்தார். என் அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், மருத்துவ செலவு செய்வதற்காக சொத்தை விற்றோம். எந்த மருத்துவமனையில் மேலூரில் உள்ள பெருமாள் மருத்துவரிடம் தான் என் அப்பா சிகிச்சை பெற்றுவந்தார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா அரசு ராசாசி மருத்துவமனை,

மதுரையில் தான் சிகிச்சை பெற்றார் என்றும் நான் சொல்வதுபோல பெருமாள் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் அது தவறு.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.01.29 20:45:28 +0530

Sub Judge

Melur